முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல: 02/2015

எனது இலக்கம் :DMS/CIR/2015/Bonus

முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு 01
2015.12.09

அமைச்சுக்களின் செயலாளர்கள் /
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்முழுமையாக அரசுக்குச்
சொந்தமான கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் பதவியணியினருக்கு 2015 ஆம் ஆண்டிற்கான மிகையூதியங்களை செலுத்துதல்**

## 01. மிகையூதியங்களை செலுத்துதல்

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் பதவியணியினருக்கு 2015 ஆம் ஆண்டிற்கான மிகையூதியங்களை செலுத்துவதற்கு 2015.12.02 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பின்வரும் விதத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

| நிறுவன வகை | உத்தேச மிகையூதியம் |
|---|---|
| குறித்த நிதியாண்டில் இலாபம் உழைத்துள்ளதும்வரவு, செயலாற்றுகை அல்லது வேறு ஏதேனும் **ஊக்குவிப்புக்களைச் செலுத்தாததுமான**அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள். | ரூபா.15,000/- |
| குறித்த நிதியாண்டில் இலாபம் உழைத்துள்ளதும் வரவு,செயலாற்றுகை அல்லது வேறு ஏதேனும் **ஊக்குவிப்புக்களைச் செலுத்தியுள்ளதுமான**அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள். | ரூபா.13,500/- |
| கடந்த நிதியாண்டில் நட்டமடையும் தன்மை காணப்பட்டு, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் குறித்த நிதியாண்டில் **நட்டமடையும் தன்மையைக் குறைத்துள்ள** அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள். | ரூபா.5,000/- |
| கடந்த நிதியாண்டில் நட்டமடையும் தன்மை காணப்பட்டு, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் குறித்த நிதியாண்டில் **நட்டமடையும் தன்மையைக் குறைத்துக் கொள்ளத் தவறியுள்ள** அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள். | ரூபா.2,000/- |

**02.** குறித்த நிதியாண்டில் நட்டமடையும் தன்மை காணப்படும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் பதவியணியினருக்கு மிகையூதியங்களை செலுத்துவதற்கு முன்னர் பொதுத் திறைசேரியின் உடன்பாட்டைப் பெறுவது அவசியாகும். இதற்கான கோரிக்கைகளை உரிய அமைச்சுக்களின் செயலாளர்களின் சிபார்சுகளுடன் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கு/ தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

**03. பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்**

3.1 மிகையூதியமாகக் கருதத்தக்க ஏதேனும் அரையாண்டுக் கொடுப்பனவைஏதேனும் ஒரு நிறுவனம் செலுத்தியிருக்குமாயின் அக்கொடுப்பனவை மேலதிக மிகையூதியமாகக் கருதுவதற்கு அமைச்சரவையின் விசேட அங்கீகாரம் இல்லாதவிடத்து, அதனை வருட இறுதியில் செலுத்தப்படும் மிகையூதியத்தின் ஒரு பகுதியாகவே கருதுதல் வேண்டும்.

3.2 இச்சுற்றறிக்கையின் அடிப்படையில் வருடாந்த மிகையூதியங்களை செலுத்துவதற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அல்லது கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியை பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

இதன் போது, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை மற்றும் உழைக்கும் போது செலுத்தும் வரி ஆகிய அனைத்து வரிக் கொடுப்பனவுகளையும் கட்டளைச் சட்டங்களுக்கு இணங்கச் செலுத்தும் கடப்பாடு தொடர்பில் மிகையூதியங்களை செலுத்தும் அனைத்துக் கூட்டுத்தாபனங்களும் அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

3.3 மேலே குறிப்பிட்ட கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக குறித்த அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் வருடாந்த கணக்குகளை உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்திருக்க வேண்டுமென்பதுடன், அரச தொழில்முயற்சிகளின் சிறந்த நிர்வாகம் தொடர்பான அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் உரிய முறையில் பின்பற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

**04. முக்கிய விடயங்கள்**

4.1 மிகையூதியங்களை செலுத்துவதற்கான நிதி திறைசேரியினால் வழங்கப்பட மாட்டாது.

4.2 கூட்டு ஒப்பந்தம் அல்லது அதனை ஒத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் ஊடாகச் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளுக்கு இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டாது.

4.3 முன்னைய வருடங்களில் சாதாரண ஏற்பாடுகளுக்குபுறம்பாகமிகையூதியங்கள் செலுத்துவதற்கான அங்கீகாரம் பெற்றதுடன் இவ்வருடத்திலும் அவ்வாறான நடைமுறையினைப் பின்பற்றுவதற்கு எண்ணுகின்ற நிறுவனங்கள், 2015 இல் அவ்வாறான மிகையூதியங்களை வழங்குவதற்கு திறைசேரியின் முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

4.4 இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கிய முறையில் ஒவ்வொரு நிறுவனமும் கடந்த வருடத்தில் பின்பற்றிய மிகையூதியங்களை செலுத்துவதற்கான நிர்வாக முறைகளைப் பின்பற்றி இவ்வருடத்திலும் மிகையூதியங்களை செலுத்த முடியும்.

## 05. விளக்கங்களைப் பெறுதல்

இச்சுற்றறிக்கை தொடர்பான ஏதேனும் தெளிவுகள் அவசியம் எனின் தயவு செய்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம் / ஆர்.எச்.எஸ். சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர் மற்றும்**
**நிதிஅமைச்சின் செயலாளர்**

<u>பிரதிகள்:</u>

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமமந்திரியின்செயலாளர்
3. அமைச்சரவையின்செயலாளர்
4. கணக்காய்வாளர்நாயகம்
5. இணைத்தலைவர், தேசியசம்பளஆணைக்குழு
6. அரசாங்கதொழில்முயற்சிகள் பணிப்பாளர் நாயகம்
7. தேசியவரவுசெலவுத்திட்டபணிப்பாளர் நாயகம்